1967 ஜூலை 8]

இருந்தால், அந்த வழக்குகளுக்கு விதிவிலக்கு அளித்து, உடனடியாக பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட வழக்குகள் இருப்பதாக விவரம் இல்லை. எல்லா வழக்குகளையும் விரைவில் தீர்க்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தை அமல் நடத்தக்கூடிய ஆணையர் சட்டப் படிப்புப் பெற்றவராக இருக்கவேண்டும் என்று செய்ய அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் சட்டப் படிப்பு உள்ளவராக இருக்க வேண்டும், பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். அந்த பொறுப்பிற்கு பெரும்பாலும், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அல்லது சப்-ஜட்ஜ் தரம் உடையவர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. க. மு. ராஜகோபால்: தலைவர் அவர்களே, நீண்ட நாளாக, வழக்குகள் கோர்ட்டுகளுக்குப் போய் தண்டனை அடைந்திருந்தாலும், அப்படிப்பட்டவர்களையே அறநிலையங்கள் திரும்பவும் ட்ரஸ்டிகளாகப் போடுகின்றன. அதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தண்டனை கொடுக்கப் பட்டவர் வரக்கூடாது என்று விதியிருந்து, வந்தால் அதைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை நிலைநாட்ட அரசு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை நிலைநாட்ட அரசு முயலும்.

செய்திப் படம்

* 210 வினு.—கெ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) Fairs and Festivals என்று செய்திப்படம் தயாரிப்பதற்காக தேவஸ்தானங்களிடமிருந்து எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டது ?

(இ) இந்தப் பணம் படத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப் பட்டதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ரூ. 2,18,000.00

(இ) ஆம்.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன்: சார், என்னென்ன படங்கள் வெளியிலே கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற விவரம் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, திருக்கோயில்கள், திருவிழாக்கள் என்கிற படம் ரூ. 2 லட்சம் அளவில் எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 8,750 பாக்கியிருக்கிறது. அந்தப் படம் 7,077 அடி நீளம் உள்ளதாக இருக்கிறது.

திரு. ரா. ராமசந்திர துரை : சார், கோவில்களின் பணம் கல்வி, தொழில் இவற்றிற்கு ஈடு செய்யப்படுகிறது என்பது உண்மையா? இல்லாவிட்டால், அப்படி ஈடுபடுத்தும் எண்ணம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோவிலில் கிடைக்கும் வருமானத்தில், மீதம் இருப்பதை கல்வித் துறைக்குச் செலவு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையில் பழனிக் கோவில் வருமானத்திலிருந்து கல்லூரிக்கும் மற்றதற்கும் செலவு செய்யப்படுகிறது. வேறு பல கோவில்களிலும் மிச்சம் பிடிக்கும் தொகைகளைக் கொண்டு கல்விக்கு உபயோகிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், இப்படி பிலிம் எடுப்பதன் உள் நோக்கம் என்ன என்று தெரிந்துகொள்ளலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் படம் 7,077 அடி நீளம் உள்ளது. படம் எடுக்கப்பட்டிருப்பதன் நோக்கம் அந்த இடங்களில் உள்ள கலைச் சிறப்பையும், திருவிழாக்களின் தன்மைகளையும் பெருமைகளையும் மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் இதிலிருந்து வருமானம் வரும் நிலை இல்லை. இப்படிப்பட்ட படங்களை விநியோகித்து அதன் மூலம் வருமானத்தைத் தேடலாமா என்பது யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, இதற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஏழாயிரம் அடி அளவில் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது எத்தனை பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதே, அது நியாயமான முறையில் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் படம் 7,077 அடி நீளம்; அதற்கு ரூ. 2 லட்சம் வரை செலவாகியிருக்கிறது. எட்டு கோவில் கட்டடங்களிலிருந்து நிதி பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலிலிருந்தும் ரூ. 27,250 வீதத்தில் பெற்றிருக்கிறது. குறிப்பாக கோவிலின் சிறப்பை வெளிப்படுத்த என்று எடுக்கப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வருபவர்களை எல்லா இடங்களுக்கும் கொண்டு காண்பிப்பது சௌகரியமாக இருக்காது. ஆகவே, நம்முடைய கோவில்களில் இருக்கும் கலைச் சிறப்பை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் செய்யலாம் என்று செய்யப்படுகிறது.

1967 ஜூலை 8]

திரு. எ. பாலசுப்பிரமணியன் : திருக்கோவில்கள், திருவிழாக்கள் பற்றி விளம்பரம் செய்வது, பிரசாரம் செய்வது இவற்றை சர்க்கார் ஏற்று நடத்துவதென்றால், சமயப்பற்றற்ற கொள்கைக்கு விரோதமானது என்று ஆட்சி கருதவில்லையா? அப்படிக் கருதினால், அதன் மீது என்ன யோசனை செய்யும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, இதெல்லாம் அரசாங்கத்தின் பணத்திலிருந்து செய்யப்படவில்லை. கோவில்களின் வருமானத்தில் மிச்சம் ஏற்படுவதிலிருந்து செய்யப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : சபாநாயகர் அவர்களே, இந்தப் படம் எங்கே காட்டப்படுகிறது? அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே காட்டப்படுகிறதா? வடநாட்டிலே காட்டப்படுகிறதா? தென்னாட்டிலே காட்டியதாகத் தெரியவில்லையே? எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்க விரும்பினால், ஏற்பாடு செய்யலாம். கண்காட்சி முதலியவற்றில் காட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பதினொரு வினாக்கள் இருக்கின்றன. திரு. கோதண்டராமன் அவர்கள்தான், அதிகமாக வினாக்கள் கேட்டுள்ளார்கள். அவரே இன்னொரு துணை வினா கேட்க விரும்புகிறார்களா? சரி.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தப் படத்திலே பணக்கார சாமி குடியிருக்கக்கூடிய கோவில்களை மட்டும்தான் எடுத்திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் படத்தை நானே இன்னும் பார்க்கவில்லை. என்னென்ன வந்திருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. குறிப்பாகப் பெரிய கோவில்களிலே உள்ள கலைச்சிறப்பு மிக்கதும், கண்கவர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளதும், பொது மக்கள் கூடுகின்ற திருவிழாக்களும் எடுக்கப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது. அந்த வகையில்தான் அது எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டுக் கோவில்களிலே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்துடன் சர்வ சமயமும் ஒன்று என்று அமைந்துள்ள வடலூர் சத்திய ஞான சபைக் கோவிலையும் இந்தப் படத்தில் சேர்த்து எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொல்லியபடி நானே அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. அது பற்றிய விவரம் இல்லை.